**செய்தி வெளியீடு எண்: 363** **நாள்: 26.05.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்களை இன்று (26.5.2020) சென்னை தலைமைச் செயலகத்தில், சின்னத்திரை சங்கத்தின் தலைவர் திருமதி.சுஜாதா விஜயகுமார், பொதுச் செயலாளர் திருமதி.குஷ்பு மற்றும் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் திரு.ஆர்.கே.செல்வமணி ஆகியோர் சந்தித்து தமிழகத்தில் சின்னத்திரை படப்பிடிப்பு நடத்த அனுமதி வேண்டியது தொடர்பான தங்களது கோரிக்கையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சென்று, சின்னத்திரை படப்பிடிப்பு நடத்த அனுமதி பெற்றுத் தந்ததற்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

சின்னத்திரை படப்பிடிப்பின்போது அதிகபட்சமாக நடிகர், நடிகை, தொழில்நுட்ப பணியாளர்கள் உட்பட 20 எண்ணிக்கைகளுக்கு மிகாமல் படப்பிடிப்பு நடத்தலாம் என்று தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதியினை தளர்த்தி அதிகபட்சமாக 50 சதவீத எண்ணிக்கையில் சின்னத்திரை படப்பிடிப்பு நடத்த அனுமதி பெற்றுத் தருமாறு சின்னத்திரை சங்கத்தின் தலைவர் திருமதி.சுஜாதா விஜயகுமார், பொதுச் செயலாளர் திருமதி.குஷ்பு மற்றும் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் திரு.ஆர்.கே.செல்வமணி ஆகியோர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனுவினை அளித்தார்கள். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் இக்கோரிக்கையினை மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என தெரிவித்தார்கள்.

மேலும், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களிடம், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில் அம்மா திரைப்பட படப்பிடிப்பு நிலையம் கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ரூ.5 கோடி நிதியில் முதல் தவணையாக ரூபாய் 1 கோடியே 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூபாய் 1 கோடி நிதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது எனவும், மீதமுள்ள ரூ.50 லட்சத்தை விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் துறை உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து அம்மா திரைப்பட படப்பிடிப்பு நிலையம் கட்டுவதற்கான நிதியினை விரைந்து விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என

தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் அவர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின்போது, திரைப்பட இயக்குநர் சங்க செயலாளர் திரு.ஆர்.வி.உதயகுமார், பெப்சியின் துணைத்தலைவர் மற்றும் இசையமைப்பாளர் திரு.தினா, திரைப்பட நடிகர் மற்றும் தயாரிப்பாளர் திரு.மனோபாலா, திரைப்பட தயாரிப்பாளர் திரு.சுரேஷ் காமாட்சி, இயக்குநர் திரு.லியாகத் அலிகான் மற்றும் சின்னத்திரை நடிகர் சங்க நிர்வாகி திரு.வெங்கட் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**